தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1979, நவம்பர் 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மின்துறை ஊழியர்களுக்கு விபத்துத் தடுப்பு நடவடிக்கைகள்

* வினா எண் 61—திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 ஆகஸ்ட் 31-ம் தேதி மின்சார அதிர்ச்சி காரணமாக சென்னை ஆலந்தூரில் வேலை செய்து கொண்டிருந்த மின்சார ஊழியர்கள் விபத்துக்குள்ளாகி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனரா?

(ஆ) தொடர்ந்து இதுபோன்று நடைபெறும் விபத்துக்களை தடுக்க இலாகா என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஒரு ஊழியர் விபத்துக்குள்ளானார். தகுந்த சிகிச்சைகள் சென்னை பொது மருத்துவமனையில் கொடுத்தும், அவர் 26—3—1979 அன்று காலமானார்.

(ஆ) மின்சார ஓட்டத்தை துண்டித்தல் செய்தபின், நிறுத்திவிட்டு, குறைகளைச் சீர்படுத்தவேண்டுமென்று ஊழியர்களுக்கு வாரியத்தால் அறிவுரை கூறப்பட்டுள்ளது.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, மின்சார விபத்துக்கள் ஏற்படுகிற நேரத்தில் மின்சார ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் மின்சார வாரியம் உதவித் தொகை அளித்து வருகிறது. அப்படி கொடுக்கப்படுகிற, உதவித் தொகையில் மத்திய அரசின் பங்கு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மத்திய அரசு ஏதும் உதவுவது இல்லை.

[1979 நவம்பர் 2

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார விபத்தின் காரணமாக இறந்துவிடுகிறவரின் மனைவிக்கு ஏதேனும் வேலை கொடுக்க வாய்ப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பணிக் காலத்தில் விபத்தில் இறந்துவிட்டால், அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை தரவேண்டும் என்று மின்சார வாரியம் முடிவு எடுத்துள்ளது.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் மின்வாரியம் பெற்றுள்ள கடன்.

*வினா எண். 62—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்வாரியம் 1978–79-ல் எல்.ஐ.சி. நிறுவனத்திடம் கடன் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) எந்தப் பணிக்காக வாங்கப்பட்டது?

(ஈ) எவ்வளவு வட்டி?

(உ) எத்தனை ஆண்டில் திரும்ப செலுத்த வேண்டும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) & (இ) தூத்துக்குடி அனல் மின் திட்டம், சுருளியாறு திட்டம் மற்றும் மின் வினியோகம் அனுப்புதல் திட்டங்களுக்காக எட்டு கோடி ரூபாய் கடன் பெறப்பட்டுள்ளது.

(ஈ) 11 சதவீதம்.

(உ) 15 ஆண்டுகளில் திரும்பச் செலுத்த வேண்டும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, எல்.ஐ.சி.யிடமிருந்து அல்லாமல், அரசாங்கத்தின் வேறு ஏதாவது நிதி ஸ்தாபனங்களிடமிருந்து மின் வாரியம் ஏதேனும் கடன் தொகை பெற்றுள்ளதா? அப்படியானால், எந்தெந்த ஸ்தாபனங்களிடமிருந்து என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசாங்கத் திடமிருந்து கடன் பெறுகிறது. அதேபோல் வெளி மார்க்கட்டிலிருந்து கடன் பெறுகிறது. எல்.ஐ.சி.யிடமிருந்து கடன் பெறுகிறது. Rural Electrification Corporation யிடமிருந்து கடன் பெறுகிறது. பாங்கு களிடமிருந்து கடன் பெறுகிறது. ஹட்கோவிடமிருந்தும் கடன் பெற்று இருக்கிறது.